ஸ்ரீ ஜகதீஷ் பில்ம்ஸாரின்
லவங்கி
a CHANDRALEKHA Release....

...டிதரா

ஷாஜஹான்

பேருபட்டர்

ரங்க... முத்தண்ணு

...ஆர். ரா... ...ஜான் ... கோபு

சுந்தர் ராவ் ... அப்பய்ய தீக்ஷதர்

காசிவிஸ்வநாதன் ... பட்டோஜி

குமாரி ருக்மணி ... லவங்கி (காமேஸ்வரி)

ஜயபாரி ... மும்தாஜ்

பானுமதி ... மகாலக்ஷ்மி

கே. ஆர். செல்லம் ... கோமளம்

ஜயகௌரி ... மனோரமா

மற்றும் வி. எஸ். மணி, நடேசய்யர், சேதுபதிப் பிள்ளை, ராஜமய்யங்கார், அநந்தராமன், ராஜரத்தினம், ஜயா, கல்யாணி முதலியோர்.

மிஸ். அஸூரியின் நடன கோஷ்டியும்.

கதை, வசனம் :
P. R. நாராயணன், M.A.,

பாடல்கள் :
பாபநாசம் சிவன்

*

ஒளிப் பதிவு :
ஜிதன் பானர்ஜி
புருஷோத்தம்

சங்கீதம் :
சுப்பராமன்
பத்மநாப சாஸ்திரி

*

ஒலிப்பதிவு :
தின்ஷா கே. தெஹ்ராணி
லோகநாதன்

கலை :
F. நாகூர்
G. R. வர்மா

*

டைரக்ஷன் :
ஒய். வி. ராவ்

*

ஸ்டுடியோ :
நியூடோன்

Out to conquer the pundi[illegible] home. Overwhelming Appai[illegible] Di[illegible]natha [illegible] Jaipur where he learns Persian and Quoran at [illegible] obt[illegible]ns from him an introduction to th[illegible] [illegible] charming landscape along the Jamuna, fasc[illegible] he bursts in ecstatic music, his YAMUNA VARNAN[illegible]. At Kashmir, the king's ready recognition of his genius excites the jealousy of Battoji, whose designs with Manorama, the local courtesan, only end in his own discomfiture. In disgust, J[illegible]annatha sets off to Delhi. He entertains the emperor who makes him his Court Poet.

Twelve years of separation from her darling husband! F[illegible]erty, agony and blackmail—these are the only awards to his wife Kameswari. The crusade against her led by the jealous Muthanna and his satellites torment her to the core. Her meeting with a Yatrika at the Dharmasala, proves handy for the blackmailers. Muthanna alleges illicit activity on the part of Kameswari. He demands from Peribhattu, the execution of Ghatasraddha. Sick and desperate, Kameswari leaves the home in the thick of the night. Surrendering herself to Bhimeswara, she declares: "Either I shall meet him at Delhi or perish in Jamuna".

Many vicissitudes encounter her on the journey. At last she reaches Delhi, where she is rescued in time from the clutches of a wicked man by the Empress Mumtaz, who happens to be passing near by. Kameswari reports to the queen the purpose of her mission. At the queen's suggestion she attempts to meet Jagannatha in the garden. To her shock, however, he does not even remember her. Broken-hearted she returns to the queen and reports her decision to end her life. The empress advises patience. At her behest, Kameswari assumes the name of Lavangi, biding for time and diverting herself in the rich merriments of the harem. Shah Jahan discovering Lavangi as she is dancing in the queen's apartment, desires her performance at the Durbar.

A[illegible] the Durbar, Lavangi's dance transports all the courtiers and pund[illegible] [illegible] the highest pitch of admiration. She fascinates Jagannatha. As Shah Jaha[illegible] offers him his birthday-gift, Jagannatha, to the surprise of the whole Court, demands Lavangi.

At the queen's suggestion, Lavangi meets Jagannatha in the royal gard[illegible] and finds his professions of love genuine. She agrees for a form[illegible]al wedding.

Things, however, take a dramatic turn at the wedding. Jagannatha declares Lavangi a hoax, pointing to the Mangalyam already on her neck.

What happens to Lavangi? Does Jagannatha take her back? And what of those tall pundits who declaimed him?

SEE THEM ALL ON THE SILVER SCREEN!

கதைச்சுருக்கம்

"குமரி முதல் ஹிமாசலம்வரை புலவர்களை வாதில் வெல்லவேண்டும், திக்விஜயம் புரியவேண்டும்"—இந்த ஒரே நோக்கத்துடன் ஜகன்னாதகவி தன் குடும்பத்தை விட்டு வெளியேறுகிறார். காஞ்சியில் அப்பய்யதீக்ஷிதருடன் சர்ச்சையில் வென்று, ஜயபுரம் சேர்கிறார். முகம்மதிய காஜியொருவரிடம் குரானும் பாரஸிகமும் கற்று, டில்லிச் சக்கிரவர்த்திக்கு ஒரு ஸிபாரிசுக் கடிதமும் பெறுகிறார். யமுனாதீரத்தின் இயற்கை வனப்பு கவியின் ஹிருதயத்தை ஆகர்ஷிக்கிறது. கர்ணாம்ருதமான தன் **யமுனா வர்ணன** கீர்த்தனங்களைப் பாடுகிறார். ஜகன்னாத கவிக்கு காஷ்மீர அரசனின் பாராட்டுதலும் கிடைக்கிறது. ஆனால் அதுவே வினையாய் முடிகிறது. உள்ளூர் ஆஸ்தான கவி பட்டோஜி, தாஸி மனோரமாவுடன் செய்யும் ஒரு சதியில், ஜகன்னாத கவி தெய்வீகமாகத் தப்பி, டில்லி சேர்ந்து தன் பாண்டித்யத்தால் அவரது ஆஸ்தான பண்டிதராகிறார்.

பன்னிரண்டு வருடங்களாக தன் ப்ராணநாதனை விட்டுப்பிரிந்து வாடும் **காமேச்வரியோ** தன் கிராமத்தில் பல துன்பங்களுக்கு இலக்காகிறாள். வறுமை, நிந்தனை, அபவாதம்—இதுவே அவளனுபவிக்கும் வாழ்க்கை. குடும்பக் கடனுக்காக தன் ஆபரணங்களெல்லாம் தியாகம் செய்கிறாள். தன் நாதனைப் பற்றிய தகவலுக்காகத் துடிக்கும் காமேச்வரி, தர்மசாலையில் ஒரு யாத்ரீகனைச் சந்திக்கிறாள். பேருபட்டரின் சொந்த ஞாதி முத்தண்ணாவும் அவரது கோஷ்டியும் இதை விகல்பப்படுத்தி, தங்கள் விஷம்ப பிரசாரத்திற்கு உபயோகித்துக் கொள்கிறார்கள். ஒன்று—காமேச்வரியைக் குடும்பத்தை விட்டு வெளியேற்றவேண்டும்: அல்லது ஜகன்னாதனுக்குக் கடச்ரார்த்தம் முடிக்கவேண்டும். இதுவே அவர்கள் கோரிக்கை. காமேச்வரி இந்தக் கொடுமையை எப்படிச் சகிப்பாள்? நடு நிசியில் அவள் வீட்டைவிட்டுப் புறப்படுகிறாள். பீமேச்வரன் காலடியில் விழுந்து "என் நாதனை டில்லியில் சந்திப்பேன்: இல்லையேல் அந்த யமுனையே எனக்கு சரண்யம்", என்று பிரதிக்ஞை செய்கிறாள்.

வழியில் பல அபாயங்களெல்லாம் தாண்டி, காமேச்வரி டில்லி சேர்கிறாள். களைத்து மூர்ச்சையற்றுப் பாதையில் விழுந்திருக்கும் அவளை, ஒரு துஷ்டன் அவள் கற்பைக்கெடுக்க எத்தனிக்கிறான். தக்க சமயத்தில், சக்கிரவர்த்தினி மும்தாஜ் தன் ரதத்தில் வந்து சேர்ந்து, காமேச்வரியைக்

காப்பாற்றி தன் அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்கிறாள். காமேச்வரி மூலம் சகல விவரமும் அறியும் மும்தாஜ், அவளுக்குத் தக்கதோர் உபாயம் கூறுகிறாள். காமேச்வரி நந்தவனத்தில் தன் நாதனைச் சந்திக்க முயற்சிக்கிறாள். ஆனால் ஜகன்னாத கவி அவளை அடியோடு மறந்துவிட்டார். மனமுடைந்த காமேச்வரி ராணியிடம் துக்கிக்கிறாள். தன் உயிரையும் விடத் துணிகிறாள். மும்தாஜின் ஆறுதலின்மேல், காமேச்வரி **லவங்கி** என்ற பெயருடன் அந்தப்புரக் கேளிக்கை விநோதங்களில் தன் மனதைத் தேற்றிக் காலங்கழிக்கிறாள்.

ஷாஜஹான் தற்செயலாய் ஒருநாள் லவங்கியின் நாட்டியத்தைக் கண்ணுறுகிறார். தர்பாரில் தன் பிறந்ததின வைபவத்தில் அவள் நாட்டிய மாட ஆக்ஞாபிக்கிறார்.

தர்பாரில் லவங்கியின் நாட்டியம் ஷாஜஹான் உள்பட சகலரையும் பரவசப்படுத்துகிறது. ஜகன்னாத கவியோ, தன் உள்ளத்தையே பறி கொடுக்கிறார். தன் ஜென்மதின வெகுமானத்தைக் கோரும்படி சக்கிரவர்த்தி கேட்க, ஜகன்னாத கவி லவங்கியையே கோருகிறார். இது சக்கிரவர்த்தியை தர்மசங்கடத்தி லாழ்த்துகின்றது.

ராணியின் உதவியால், லவங்கி ஜகன்னாத கவியை உத்யானவனத்தில் சந்திக்கிறாள். கவியின் ப்ரேமை நிஸ்சலமானதென்பதை அறிகிறாள். விவாகம் செய்துகொள்வதானால், இணங்குவதாக கூறுகிறாள். கவியும் சம்மதிக்கிறார்.

ஆனால், விவாக சமயத்தில் என்ன நடக்கிறது? லவங்கியின் கழுத்தில் ஏற்கனவே இருக்கும் மங்கள சூத்திரத்தை ஜகன்னாத கவி பார்க்கிறார். 'இது ஏதோ சூழ்ச்சி' என்று கூறி, லவங்கியை மணஞ்செய்துகொள்ள மறுக்கிறார்.

லவங்கியின் கதி என்ன? ஜகன்னாத கவி அவளை ஏற்றுக்கொள்கிறாரா? மற்றப் பண்டிதர்கள் கதி என்ன? முதலிய ருசிகரமான விவரங்களை—

வெள்ளித் திரையில் கண்டு களியுங்கள்.

லவங்கி

1. கைலாசம்

பல்லவி

மோடி செய்வது நியாயமோ சிலேயோ கண்ணு—
உனதுள்ளம் அணிந்தாய் என்னே மறந்தாய் இன்று -
மிகு வஞ்சனை தகுமோ (மோடி)

அநுபல்லவி

ஊமை கனுக்கண்ட விதம் நிதம்
உனைக் காண உருகும் எனது
உள்ளமறிந்திலே மதன்கணை
சுட ஒரு கண யுகமாகவே
ஓயா மயல் கொண்டு நொந்தேன்
பரிந்து மருவ இன்னும் (மோடி)

2. காமேச்வரி

பல்லவி

இன்றே என் வாழ்வில் இன்பநாள்
என் அன்பர் தன் இனிய நற்செய்தி--கேட்க (இ)

அநுபல்லவி

உன்றன் எல்லையில்லாத கருணையின் பெருமை
இன்றே உணர்ந்தேன்—துளஸி மாதா (இ)

சரணம்

துன்பக் கடல் நடுவில் சுழலும் எனை ஓர்
தோணி போல் பரிந்து கார்த்தருளும்
அன்பு மிகும் உங்களடி மலர் பணிந்தேன்
விரைவில அவர் தரிசனமே காண்பேன் (இ)

3. **ஜெகன்னாதன்**

பாவன யமுனா தீரம்
பார்க்கப் பார்க்கத் திகட்டாத கம்பீரம்
பரம யோகிகள் பரிந்தே பருகும்
பவ நோயற இன்ப வெள்ளம் பெருகும் (பாவன)

ராகம் : ஹிந்தோளம்

வேணுகான விலோலன் கோபாலன்
விதம் விதமாய் விளையாடினதிங்கே
ஆணவஞ் சேர் காளியன் மதமொடுங்க
அதன் மணி முடி தனில் தக்துததீம்த தளாங்கு
ஆடிய மாதவன் மாடுகள் மேய்த்தவன் [தகும் என
அம்புஜ மலரடி பதிந்த—பைந்தடம் (பாவன)

4. **மனோரமா**

சுகுமாரா உன்னைக் கண்டே—கனமோக மையல்
தாமதமேன் சற்றே என்னைப் பாராயோ [கொண்டே
மலர் இதழ் தேனைக் கண்ட வண்டது போல
தாகங் கொண்டேன் கலந்தின்பந் தாராய்

ராகம் : பியாக் தெலுங்கு

தாமஸமேலா ராவேலா கோபாலா
மருபாரி இகநேதாள ரா

ராகம் : காம்போதி கன்னடம்

நவமோஹனாகார நீநெந்து பந்து
சுவிலீா சதானந்த மீவே லீலா லோலா

ராகம் : கரகரப்ரியா மலையாளம்

காமுக ப்ருங்கமே காமதமென்னும்
மமதனு குசுமம் ப்ரேமாநந்தம்
ஆவேசம் எங்கும் நின் மர்த்தனம்

5. ## காமேச்வரி

பல்லவி

துயரமோ ஏழை வாழ்நாளெல்லாம்
சோதனைக்கோர் அளவில்லையோ—ஈசா (துய)

அநுபல்லவி

உயிரில்லாத உடல் போல் இவ்வுலகில்
உலவ என்னாலொரு கணம் முடியாது (துய)

சரணம்

நீயே என் அன்னை தந்தையுமன்றோ
நீயே தீன சரண்யன் அன்றோ
தூய உன் திருவுள்ளம் எதுவோ—நாதனைக்
காண்பேனோ. யமுனையைச் சரணம் புகுவேனோ (து)

6. ## மும்தாஜ்

நீள் கஞ்சவிழிக் கண்மணி மனம் நோவதேனடி
குறையொன்றிலா உன் வாழ்விலே பேரின்பம்
காண்பாயே—மனம் நோவதேனடி

தொகையறு

1. எங்கும் நிறை தயாகரன் கைவிடமாட்டான்
உள்ளமறிந்தோர் பிழையும் செய்தறியார் (மனம்)

2. அன்றுங்கள் ஸீதாதேவியும் வெங்கானம்
சென்றதும், லங்கைச் சிறையிலுழன்றதும்
அறிவையே (மனம்)

3. கலங்காதே! நாதனோடுன்னைச்
சேர்ப்பேன்—துன்பமெல்லாம்
நான் தீர்ப்பேன் சிலநாள்
பொறுப்பாயே—குறையோ (மனம்)

7. ## மும்தாஜ்

ஆ.................ஆ.....................
பாடுவோம் எல்லோரும் ஒன்ருய் ஆடுவோம் வருவீரே
தென்றல் வந்துலாவும் எழில்சேர் வசந்தமிதுவே
ஏ........ஏ........ஏ........

1. பல வண்ணமுள்ள மலர்கள் இரு கண்கள் உள்ளம்
மது உண்ணும் வண்டு சுழலும் மணம்வீசும் [கலரும்
மணம் வீசும் திசைகளெங்கும் [மயிலழகாய்
குயில் மதுரகானமுடனே நின்ருடும் தோகை
ஆ........ஆ........ஆ........ (பாடு)

2. தடஞ்சோலை எங்கும் நிறையும்
பல ஜோடி ஜோடி பறவை
இங்கு துள்ளியோடும் மீன்கள்
பளிங்கு போலும் ஓடை
ஸ்ருங்கார மாலையிதுவே.....ஏ.....ஏ
ஆ.......ஆ.......ஆ. (பாடுவோம்)

8. ## லவங்கி

பாராமுகம் ஏனே பேதை என் - பரிதாபம்
அறியார்போல் - கண்ணாலும் பாராமல்
கரைகடந்ததென் - காதல் - ஒரு
களங்கமற்ற தென்றுணர்வீர்
விரைந்து மலைவனம் கடந்து நடந்து வந்தேன் -
காலும் மனமும் நொந்தேனே.

கல்யாணி

மருவி இன்பம் தாருமே - மதன்கணையால்
வாடுமெனைப் பாருமே - ஸ்வாமி!
ஒரு முத்தம் தாரும் அபலையைக் காரும் -
ஒரு கணம் உயிர் தரியேன் மயல் தீரும்
உமதுள்ளம் ஓர் சிலையோ தயவிலையோ -
ஒரு சிறு ஜீவனை வதைப்பதும் முறையோ.

தொழுவே ர் எனைத் தள்ள ுலோ
விழுமவன் சோதனை போருமே
தழுவத் துடிக்கும் மேனியழகைப்
பாருமே க்ருபை கூறுமே.

மாயாமாளவகௌளா தொகையரு

பரமேச்வரா! உன் படைப்பில்
பெண் மக்களின் விதி இதுதானோ
இங்கினி எவர் துணை - யமுனா!
ஓ யமுனா!! ஓ யமுனா!!!

9 லவங்கி - மும்தாஜ் - ஜெகன்னாதன்

லவங்கி

ஆஹா இன்றே பேரானந்தம்
ஆரமுதைப் பருகும் என் கண்கள்
சிறகிருந்தால் நான் பறந்தே
சென்றிடுவேனே விரைவிலங்கே
காத்திருப்பாரோ போதும் சிங்காரம்
உடையலங்காரம் எந்நேரம்.

மும்தாஜ்

மகிழ்வே பெறுவாய் உன்றன் நெஞ்சம்
நானறிவேன் சென்று வா.

லவங்கி

தேன்மொழிக் கிளியே திரும்பி வந்துனக்குப்
பாலுடன் பழமும் தருவேன்

ஜெகன்னாதன்

என் இருகண் விருந்தே.

ல: போம போமையா - எ
போம் போமையா - அ
புண்யவதியின் சாபம் எனக்கு
வேண்டாம் - எனை மறந்து

ஜெ: இருவரும் என் இரு கண் என்றே
எண்ணுவேன் என் உயிரே
என் மனமறியாமல் எனைத்
தள்ளுவதறமாமோ

ல: ஒருறையில் இரண்டு கத்திகள் வைப்பதுண்டோ
ஒரு தறியில் இரண்டு யானை கட்டுவாருண்டோ ()

11. லவங்கி - ஜெகன்னாதன்

ஜெ: ப்ரேமையே உயிர்கள் இன்னுயிராமே

ல: ப்ரேமையே மருவும் வாழ்வினிலின்பம்

ஜெ: ஸுராமுதம் நிகரோ என் அன்பே

ல: ப்ரேமை கனிந்த கனியோ மலரோ

ஜெ: மனதிலரும்பும் மலரதே (ப்ரேமையே)

ல: சொல்லவும் தெரியாத சுக அனுபவமே
மதுர மதுரம்

ஜெ: காதலிதே

ல: புதியதோர் புதையல் கண்டேனே

ஜெ: இணையில் இனிய மதுவையுண்டன்

ல: என்றும் மறவேன் இனறோ் ன்னாள்

ஜெ: குயிலிசை பழிக்கும் உந்தன மழலே

ஜெ & ல: உலகினிலிதுதானே ஆனந்தம் (ப்ரேமையே)

— சுபம —

A.P.—M.S. 8-A.—5-46—30,000

எதிர்ப்பாருங்கள்
மஞ்சுளா
சந்திரலேகா தயாரிப்பு...